**சுருக்கம்**

ஆட்சி எல்லை – விழுப்புரம் மாவட்டம் – திண்டிவனம் வட்டத்தைப் பிரித்து புதிய மரக்காணம் வட்டம் உருவாக்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் [வ.நி.1(1)] துறை**

**அரசாணை (நிலை) எண். 63** **நாள்: 04.02.2015**

**படிக்கவும்:**

1. அரசாணை (நிலை) எண்.279, வருவாய்த் துறை, நாள் 9.6.2003.
2. அரசாணை (2டி) எண்.176, வருவாய்த் துறை, நாள் 15.6.2012.
3. மாவட்ட ஆட்சித்தலைவர், விழுப்புரம் கடித எண். ந.க.எச் 2/11814/2012, நாள் 18.02.2013.
4. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர், கடித எண்.பணி6(4)/ 9734/2013, நாள் 08.07.2013 மற்றும் 21.2.2014.

---

**ஆணை:–**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 11.08.14 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110–இன் கீழ் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:–

**"திண்டிவனம் வட்டத்தை பிரித்து புதிய மரக்காணம் வட்டம் உருவாக்கப்படும்."**

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையின் அடிப்படையிலும் மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி அமைக்கப்பட்ட உயர்மட்ட குழுவின் ஒப்புதலின்படியும் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் மரக்காணத்தில் ஒரு புதிய வட்டம் உருவாக்குவது தொடர்பாக தனது அறிக்கையில் கீழ்கண்டவாறு பரிந்துரை செய்துள்ளார்:–

**i) தற்போதுள்ள திண்டிவனம் வட்டம்**

| வ. எண். | குறுவட்டத்தின் பெயர் | கிராமங்களின் எண்ணிக்கை | குரூப் எண்ணிக்கை | மொத்த நிலப்பரப்பு ஹெக்டேர் | 2011–ம் ஆண்டு மக்கள்தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | மரக்காணம் | 21 | 14 | 13861.00.00 | 68336 |
| 2. | சிறுவாடி | 24 | 15 | 10947.37.00 | 34686 |
| 3. | பிரம்மதேசம் | 29 | 15 | 10053.99.00 | 39953 |
| 4. | திண்டிவனம் | 21 | 14 | 9473.49.00 | 111864 |
| 5. | ஒலக்கூர் | 36 | 18 | 13309.99.00 | 40678 |
| 6. | வடசிறுவளுர் | 37 | 16 | 11768.60.00 | 39361 |
| 7. | தீவனூர் | 21 | 13 | 10106.79.00 | 37570 |
| 8. | மயிலம் | 20 | 15 | 8893.76.50 | 34270 |
| 9. | ரெட்டணை | 25 | 16 | 10286.32.50 | 39734 |
| | மொத்தம் | 234 | 136 | 98702.31.00 | 446452 |

தற்போது திண்டிவனம் வட்டத்தில் இருந்து மரக்காணம், சிறுவாடி மற்றும் பிரம்மதேசம் ஆகிய குறுவட்டங்களுடன் கூடிய 60 வருவாய் கிராமங்களையும், 36 கிராம நிர்வாக அலுவலர்களையும் கொண்டு மரக்காணம் என புதிய வட்டம் உருவாக்கவும், மரக்காணம் வட்டம் உருவாக்கப்பட்ட பின்பு உள்ள குறுவட்டங்கள் பின்வருமாறு:–

திண்டிவனம் வட்டம் (மரக்காணம் புதிய வட்டம் பிரிக்கப்பட்ட பின்பு)

| வ. எண் | குறுவட்டத்தின் பெயர் | கிராமங்களின் எண்ணிக்கை | குரூப் எண்ணிக்கை | மொத்த நிலப்பரப்பு | 2011ம் ஆண்டு மக்கள் தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | திண்டிவனம் | 27 | 18 | 11357.170 | 124729 |
| 2. | ஒலக்கூர் | 44 | 22 | 13309.990 | 40678 |
| 3. | வடசிறுவளூர் | 37 | 16 | 11768.600 | 39361 |
| 4 | நீவலூர் | 21 | 13 | 10106.790 | 37570 |
| 5 | மயிலம் | 20 | 15 | 8893.765 | 34270 |
| 6 | ரெட்டணை | 25 | 16 | 10286.325 | 39734 |
| | | 174 | 100 | 65722.64 | 316342 |

புதிய மரக்காணம் வட்டம்

| வ. எண் | குறுவட்டத்தின் பெயர் | கிராமங்களின் எண்ணிக்கை | குரூப் எண்ணிக்கை | மொத்த நிலப்பரப்பு | 2011ம் ஆண்டு மக்கள் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | மரக்காணம் | 21 | 14 | 13861.00.00 | 68336 |
| 2 | சிறுவாடி | 24 | 15 | 10947.37.00 | 34686 |
| 3 | பிரம்மதேசம் | 15 | 7 | 6761.200 | 28018 |
| | மொத்தம் | 60 | 36 | 31569.570 | 131040 |

**ii) புதிய வட்டம் பிரிப்பதற்கான அவசியங்கள்**

(i) அரசின் நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்கும், கட்டுக்கோப்பான சமுதாய முன்னேற்றம் மற்றும் அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதிலும், இயற்கை சீற்றங்கள் ஏற்படும்போது, மக்களை நாடி சென்று உதவிக்கரம் நீட்டுவதிலும், பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு நிலைகளில் மக்களுடன் இணைந்து செயல்படுவதிலும் வருவாய் துறை முக்கிய பங்காற்றுவதுடன், நிர்வாகத்தின் முதுகெலும்பாகவும் தொடர்ந்து இயங்கி வருகிறது.

(ii) இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த வருவாய்த்துறையின் சேவை மக்களை விரைந்தடைய வேண்டுமென்ற நோக்கில் புதிய வருவாய் வட்டங்களை உருவாக்க நிர்ணயிக்கப்பட்ட வரையறைகளுக்கு உடன்பட்டு மக்கள் எளிதாக வட்டாட்சியர் அலுவலகங்களை அணுகி தங்களுக்கு தேவையானவற்றை நிறைவேற்றிக் கொள்ளவும், வட்டாட்சியர் அலுவலகம் திறம்பட செயல்பட வேண்டும் என்பதற்காக 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 4 இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகை கொண்ட வருவாய் வட்டங்களை பிரிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் உத்தரவிட்டதின் அடிப்படையில் புதிய வட்டம் தோற்றுவிக்க பரிந்துரைக்கப்பட்டது.

(iii) ஒருங்கிணைந்த திண்டிவனம் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து கீழ்புதுப்பட்டு கிராமம் 45 கி.மீ தூரத்தில் உள்ளது. தற்போது மரக்காணம் தலைமையிடமாக கொண்டு

புதிய வட்டம் உருவாக்கப்பட்டால் மேற்படி கிராமம் வட்ட தலைநகரிலிருந்து 7 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

(iv) எனவே, திண்டிவனம் வட்டத்தினைப் பிரித்து புதியதாக மரக்காணம் வட்டம் உருவாக்குவது தொடர்பாக அரசாணை எண்.279, வருவாய்த் துறை, நாள் 9.6.2003ன்படி மாவட்ட ஆட்சியர் கீழ்க்கண்டவாறு விவரங்களை அனுப்பியுள்ளார்:–

iii) திண்டிவனம் வட்டம் பிரம்மதேசம் உள்வட்டத்தில் அமைந்துள்ள கிராமங்களான 1) மானூர், 2) ஆத்தூர், 3) எண்டியூர், 4) குருவம்மாபேட்டை, 5) மொளசூர், 6) விட்டலாபுரம், 7) கட்டனை, 8) ஜானகிபேட்டை, 9) தென்நெற்குணம், 10) எலவளப்பாக்கம், 11) கோவடி, 12) கீழ்சேவூர், 13) சேனலூர், 14) கீழ்பூதேரி ஆகிய கிராமங்கள் திண்டிவனம் வட்ட தலைமையிடத்திலிருந்து 3 முதல் 12 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளன. இக்கிராமங்களை புதிய மரக்காணம் வட்டத்தில் சேர்த்தால் அதிகபட்ச தூரமாகிறது. எனவே இக்கிராமங்களை திண்டிவனம் வட்டத்திலேயே வைத்துக் கொள்ளலாம் என்றும் இக்கிராமங்களை கீழ்க்கண்டவாறு திண்டிவனம் மற்றும் ஒலக்கூர் உள்வட்டத்தில் சேர்க்கலாம் எனவும் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

| திண்டிவனம் உள்வட்டம் | ஒலக்கூர் உள்வட்டம் |
|---|---|
| மானூர், ஆத்தூர், எண்டியூர், குருவம்மாபேட்டை, மொளசூர் மற்றும் கோவடி | விட்டலாபுரம், கட்டனை, ஜானகிபேட்டை, தென்நெற்குணம், எலவளப்பாக்கம்,, கீழ்சேவூர், சேனலூர், கீழ்பூதேரி |

இதனால் ஒலக்கூர் உள்வட்டத்தில் 44 கிராமங்கள் அடங்குவதால் ஒலக்கூர் உள்வட்டத்தினை இரண்டாகப் பிரித்து ஆவணிப்பூர் கிராமத்தை தலைமையிடமாகக் கொண்டு புதியதாக ஆவணிப்பூர் உள்வட்டம் உருவாக்க விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் பரிந்தரை செய்துள்ளார். மேலும் கீழ்சேவூர், சேனலூர், கீழ்பூதேரி ஆகிய கிராமங்கள் ஏற்கனவே ஒலக்கூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளன என்றும், மீதமுள்ள 11 கிராமங்களையும் மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து பிரித்து ஒலக்கூர் ஊராட்சி ஒன்றியத்தில் சேர்க்கலாம் என்றும் பரிந்துரை செய்துள்ளார்.

3. பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து அளவுகோல்களும் பூர்த்தி செய்வதால், விழுப்புரம் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையினை ஏற்று, திண்டிவனம் வட்டத்தினை பிரித்து புதிய மரக்காணம் வட்டம் உருவாக்கவும், மரக்காணம் வட்டத்திற்கு 41 பணியிடங்கள் வருவாய்த் துறைக்கும், 8 பணியிடங்கள் நில அளவைப் பிரிவுக்கும் தோற்றுவிக்க ஒப்பளிப்பு செய்தும், புதியதாக மரக்காணம் வட்டம் உருவாக்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் வருடத்திற்கு தோராயமாக தொடரும் செலவினம் ரூ.1,47,60,360/–ம் மற்றும் தொடரா செலவினம் ரூ.17,38,000/–ம் நிதி ஒப்பளிப்பு வழங்க கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

4. மேற்கண்ட சூழ்நிலையில், கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரைகளை அரசு நன்கு ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:–

I) விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டத்தைப் பிரித்து புதிய மரக்காணம் வட்டம் உருவாக்கப்படுகிறது.

II) திண்டிவனம் வட்டத்தில் உள்ள ஒலக்கூர் உள்வட்டத்தை இரண்டாகப் பிரித்து புதியதாக ஆவணிப்பூர் உள்வட்டம் உருவாக்கப்படுகிறது.

III) புதியதாக உருவாக்கப்படும் மரக்காணம் வட்டத்திற்கு கீழ்கண்டவாறு மொத்தம் 41 பணியிடங்களும், இதில் 22 பணியிடங்கள் மறுபரவலமைத்தல் மூலமும், 19 பணியிடங்கள் புதியதாக உருவாக்கவும் ஒப்புதல் வழங்கப்படுகிறது:-

பொதுப் பிரிவு

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | திண்டிவனம் வட்டத்திலுள்ள மொத்த பணியிடங்கள் | திண்டிவனம் வட்டத்தில் நிறுத்திவைக்க வேண்டிய பணியிடங்கள் | மறுபரவலமைத்தல் மூலம் நிரப்பப்பட வேண்டிய பணியிடங்கள் | புதியதாக தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள் | மொத்த பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | வட்டாட்சியர் | 1 | 1 | -- | 1 | 1 |
| 2. | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | 1 | 1 | -- | 1 | 1 |
| 3. | மண்டல துணை வட்டாட்சியர் | 3 | 2 | 1 | -- | 1 |
| 4. | வருவாய் உதவியாளர் *4 மிகைப்பணியிடங்கள் | 11 | 5 | 2 | -- | 2 |
| 5. | வருவாய் ஆய்வாளர் | 9 | 7 | 2 | 1 | 3 |
| 6. | இளநிலை உதவியாளர் ** 1 மிகைப்பணியிடம் | 4 | 2 | 1 | -- | 1 |
| 7. | தட்டச்சர் # 1 மிகைப்பணியிடம் | 3 | 1 | 1 | -- | 1 |
| 8. | பதிவுறு எழுத்தர் | 1 | 1 | -- | 1 | 1 |
| 9. | ஓட்டுனர் | 1 | 1 | -- | 1 | 1 |
| 10. | அலுவலக உதவியாளர் | 10 | 9 | ##3 (புதியதாக உருவாக்கப்பட்டுள்ள பர்கூர் வட்டத்திலிருந்து 2 பணியிடங்கள் மறுபரவலமைத்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும் (2+1)). | 2 | 5 |
| 11. | மசால்சி | 1 | 1 | -- | 1 | 1 |
| 12. | இரவுக் காவலர் | -- | -- | -- | 1 | 1 |
| | மொத்தம் | 45 | 31 | 10 | 9 | 19 |

*4 வருவாய் உதவியாளர் பணியிடங்கள் மிகைப்பணியிடங்களாக உள்ளன. இந்த 4 மிகைப் பணியிடங்களில் சிறப்புத் திட்ட அமலாக்கம், தேர்தல், வட்ட வழங்கல் பிரிவுகளுக்கு தலா 1 பணியிடம் வீதம் மறுபரவலமைத்தல் மூலம் மாற்றம் செய்யப்பட வேண்டும். மீதமுள்ள ஒரு மிகைப் பணியிடம் தேவைப்படும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

** 1 இளநிலை உதவியாளர் பணியிடம் மிகைப்பணியிடமாக உள்ளது. இந்த ஒரு மிகைப் பணியிடம், வட்ட வழங்கல் பிரிவிற்கு மறுபரவலமைத்தல் மூலம் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

# 1 தட்டச்சர் பணியிடம் மிகைப்பணியிடமாக உள்ளது. இந்த ஒரு மிகைப் பணியிடம் திண்டிவனம் வட்டம் சமூக பாதுகாப்புத் திட்டம் பிரிவிற்கு மறுபரவலமைத்தல் மூலம் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

## புதியதாக உருவாக்கப்பட்டுள்ள பர்கூர் வட்டத்தில் 2 அலுவலக உதவியாளர் பணியிடங்கள் மிகைப்பணியிடங்களாக உள்ளன. இந்த 2 மிகைப்பணியிடங்களை புதியதாக உருவாக்கப்படும் மரக்காணம் வட்டத்தில் பொதுப்பிரிவிற்கு மறுபரவலமைத்தல் மூலம் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

சமூகபாதுகாப்புத் திட்டம்

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 1 | சிறப்பு வட்டாட்சியர் | 1 | 1 | -- | 1 | 1 |
| 2 | வருவாய் உதவியாளர் | 2 | 1 | 1 | -- | 1 |
| 3 | இளநிலை உதவியாளர் # 1 மிகைப்பணியிடம் | 3 | 1 | 1 | -- | 1 |
| 4 | தட்டச்சர் | -- | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | -- | -- |
| 5 | அலுவலக உதவியாளர் | -- | -- | -- | 1 | 1 |
| 6 | பதிவுரு எழுத்தர் | 1 | 1 | -- | 1 | 1 |
| 7 | ஓட்டுநர் | 1 | 1 | 1 (வட்ட வழங்கல் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| | மொத்தம் | 8 | 6 | 3 | 3 | 6 |

#1 இளநிலை உதவியாளர் *பணியிடம் மிகைப்பணியிடமாக உள்ளது.* இந்த ஒரு *மிகைப் பணியிடம்* தேவைப்படும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

சிறப்பு திட்ட அமலாக்கம்

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 1 | துணை வட்டாட்சியர் | 1 | 1 | -- | 1 | 1 |
| 2 | உதவியாளர் | 1 | 1 | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| 3 | கணினி இயக்குபவர் (தொகுப்பூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ.7500/--வீதம்) | 1 | 1 | 1 (தேர்தல் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| | மொத்தம் | 3 | 3 | 2 | 1 | 3 |

தேர்தல் பிரிவு

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 1 | துணை வட்டாட்சியர் | 1 | 1 | -- | 1 | 1 |
| 2 | வருவாய் உதவியாளர் | 1 | 1 | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| 3 | கணினி இயக்குபவர் # 2 மிகைப்பணியிடம் | 2 | -- | -- | -- | -- |
| 4 | இளநிலை உதவியாளர் ## 1 மிகைப்பணியிடம் | 1 | -- | -- | -- | -- |
| | மொத்தம் | 5 | 2 | 1 | 1 | 2 |

# 2 கணினி இயக்குபவர் *பணியிடம் மிகைப்பணியிடங்களாக* உள்ளன. இதில் ஒரு *மிகைப் பணியிடம் சிறப்புத் திட்ட அமலாக்கம் பிரிவிற்கு மறுபரவலமர்த்தல் மூலம் மாற்றம் செய்யப்பட வேண்டும். மீதமுள்ள 1 மிகைப் பணியிடம்* தேவைப்படும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

## # 1 இளநிலை உதவியாளர் பணியிடம் மிகைப்பணியிடமாக உள்ளது. இந்த ஒரு மிகைப் பணியிடம் தேவைப்படும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

வட்ட வழங்கல் பிரிவு

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 1 | வட்ட வழங்கல் அலுவலர் (துணை வட்டாட்சியர் நிலை) | 1 | 1 | -- | 1 | 1 |
| 2 | வருவாய் உதவியாளர் | 1 | 1 | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| 3 | இளநிலை உதவியாளர் | 1 | 1 | 1 (பொதுப் பிரிவிலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 1 |
| 4 | தனிவருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) #1 மிகைப்பணியிடம் | 3 | 1 | 1 | -- | 1 |
| 5 | ஓட்டுநர் ## 1 மிகைப்பணியிடம் | 1 | -- | -- | -- | -- |
| 6 | கணினி இயக்குவர் ### 1 மிகைப்பணியிடம் | 1 | -- | -- | -- | -- |
| | மொத்தம் | 8 | 4 | 3 | 1 | 4 |

# 1 தனிவருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) பணியிடம் மிகைப்பணியிடமாக கண்டறியப்பட்டது. இந்த 1 மிகைப்பணியிடம் தேவைப்படும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

## 1 ஓட்டுநர் பணியிடம் மிகைப்பணியிடமாக உள்ளது. இந்த 1 மிகைப்பணியிடம் இதே வட்டத்திற்கு சமூக பாதுகாப்புத் திட்டம் பிரிவிற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

### 1 கணினி இயக்குபவர் பணியிடம் மிகைப்பணியிடமாக கண்டறியப்பட்டது. இந்த 1 மிகைப்பணியிடம் தேவைப்படும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

நில அளவைப் பிரிவு

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 1 | மண்டல துணை ஆய்வாளர் | 1 | 1 | -- | 1 | 1 |
| 2 | வட்ட சார் ஆய்வாளர் | 1 | 1 | -- | 1 | 1 |
| 3 | குறுவட்ட அளவர் | 9 | 7 | ### 3 (1 மிகைப் பணியிடம் காளையார் கோவில் வட்டத்திலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும்). | -- | 3 |
| 4 | முதுநிலை வரைவாளர் | 1 | 1 | -- | 1 | 1 |
| 5 | வரைவாளர் # 1 மிகைப்பணியிடம் | 1 | -- | -- | -- | -- |
| 6 | புல உதவியாளர் | 1 | 1 | -- | 1 | 1 |
| 7 | நத்தம் சார் ஆய்வாளர் ## 1 மிகைப்பணியிடம் | 1 | -- | -- | 1 -- | 1 -- |
| | மொத்தம் | 15 | 11 | 3 | 4 | 7 |

# 1 வரைவாளர் பணியிடம் மிகைப் பணியிடமாக உள்ளது. இந்த மிகைப்பணியிடம் தேவைப்படும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

## 1 நத்தம் சார் ஆய்வாளர் பணியிடம் மிகைப் பணியிடமாக உள்ளது. இந்த மிகைப்பணியிடம் தேவைப்படும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

### புதியதாக உருவாக்கப்பட்டுள்ள காளையார்கோவில் வட்டத்தில் ஒரு குறுவட்ட அளவர் பணியிடம் மிகைப்பணியிடமாக உள்ளது. இந்த மிகைப்பணியிடம் மறுபரவலமர்த்தல் மூலம் நில அளவை பிரிவிற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

**மரக்காணம் வட்டத்திற்கான மொத்த பணியிடங்கள்**

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 1 | பொதுப்பிரிவு | 45 | 31 | 10 | 9 | 19 |
| 2 | சமூகப் பாதுகாப்பு திட்டம் | 8 | 6 | 3 | 3 | 6 |
| 3 | சிறப்பு திட்ட அமலாக்கம் | 3 | 3 | 2 | 1 | 3 |
| 4 | தேர்தல் பிரிவு | 5 | 2 | 1 | 1 | 2 |
| 5 | வட்ட வழங்கல் பிரிவு | 8 | 4 | 3 | 1 | 4 |
| 6 | நில அளவை பிரிவு | 15 | 11 | 3 | 4 | 7 |
| | மொத்தம் | 84 | 57 | 22 | 19 | 41 |

**மிகைப்பணியிடங்கள்**

| பணியிடத்தின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|
| உதவியாளர் | 1 |
| இளநிலை உதவியாளர் | 2 |
| தனிவருவாய் ஆய்வாளர் | 1 |
| கணினி இயக்குபவர் | 2 |
| வரைவாளர் | 1 |
| நத்தம் சார் ஆய்வாளர் | 1 |
| மொத்தம் | 8 |

பிற வட்டங்களிலுள்ள மிகைப்பணியிடங்கள் புதிதாக உருவாக்கப்படும் மரக்காணம் வட்டத்திற்கு மறுபரவலமர்த்தல் மூலம் மாற்றம் செய்யப்படும் பணியிடங்கள்.

| வட்டத்தின் பெயர் | பணியிடத்தின் பெயர் | | |
|---|---|---|---|
| | அலுவக உதவியாளர் | குறுவட்ட அளவர் | மொத்தம் |
| பர்கூர் | 2 | --- | 2 |
| காளையார்கோவில் | -- | 1 | 1 |
| மொத்தம் | 2 | 1 | 3 |

iv) புதியதாக உருவாக்கப்படும் மரக்காணம் வட்டத்திற்கு கீழ்க்கண்ட அட்டவணையில் உள்ளவாறு ஒரு வருடத்திற்கு ஏற்படும் தொடரும் மற்றும் தொடரா செலவினங்களுக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

அ) தொடரும் செலவினம்

| வ. எண் | விவரம் (ஆண்டொன்றுக்கு) | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் (திருத்திய ஊதிய விகிதப்படி) | 40,95,600 |
| 2 | தாலுக்கா அலுவலக கட்டிட வாடகை | 1,44,000 |
| 3 | மின்சார கட்டணம் | 1,20,000 |
| 4 | எரிபொருள் (டீசல்) | 1,92,000 |
| 5 | தொலைபேசிக் கட்டணம் | 25,500 |
| | மொத்தம் | 45,77,100 |

(ரூபாய் நாற்பத்தைந்து இலட்சத்து எழுபத்தேழாயிரத்து நூறு மட்டும்)

ஆ) தொடரா செலவினங்கள்

| வ. எண் | விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | தளவாடங்கள் | 4,00,000 |
| 2 | ஈப்பு | 11,12,000 |
| 3 | தொலைபேசி இணைப்பு | 6,000 |
| 4 | கணினி | 75,000 |
| 5 | பிரிண்டர் | 25,000 |
| 6 | ஜெராக்ஸ் (நகல்) இயந்திரம் | 65,000 |
| 7 | பேக்ஸ் | 10,000 |
| 8 | குளிர்சாதனம் | 25,000 |
| 9 | தீயணைப்பான் | 10,000 |
| 10 | மிதிவண்டி, சுவர்கடிகாரம் மற்றும் பணப்பெட்டி | 10,000 |
| | மொத்தம் | 17,38,000 |

(ரூபாய் பதினேழு இலட்சத்து முப்பத்தெட்டாயிரம் மட்டும்)

v) தொகுப்பூதியத்தில் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு பணிக்காலம் ஒரு ஆண்டு முடிவதற்கு முன்பாக பணி இடைவெளி (Break in service) கொடுக்கப்படவேண்டும்.

5. மேலே பத்தி 4(iv)-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்க வேண்டும்.

(I) பணியாளர் சம்பளங்கள்

(i) வருவாய் பணியிடங்கள் ரூ.1,000/-

2053-00 மாவட்ட நிருவாகம் - 094 ஏனைய பணியாளரமைப்பு -I. திட்டத்தில் சேராதது - AB வட்டப் பணியாளரமைப்புகள் - 01 சம்பளங்கள்
(த.தொ.கு 2053 00 094 AB 0102)

(ii) நில அளவைப் பணியிடங்கள் ரூ.1,000/–
2029–00 நில வருவாய் – 102 நில அளவை நிலவரி ஏற்பாட்டுப் பணிகள் – I. திட்டத்தில் சேராதது – AF நில அளவை பராமரிப்பு பணி – 01 சம்பளங்கள்
(த.தொ.கு 2029 00 102 AF 0105)

(iii) குடிமைப் பொருள் பணியிடங்கள் ரூ.1,000/–
3456–00 நுகர்பொருள் வழங்கல் – 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் – I. திட்டத்தில் சேராதது AB மாவட்ட பணியாளரமைப்பு – 01 சம்பளங்கள்
(த.தொ.கு 3456 00 001 AB 0108)

(II) 2053–00 மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு – I. திட்டத்தில் சேராதது – AB வட்டப் பணியாளரமைப்புகள்

(அ) 05 அலுவலகச் செலவுகள் 01 தொலைபேசி கட்டணங்கள் ரூ.31,500/–
தொடரும் செலவினம் ரூ.25,500/– மற்றும் தொடராச் செலவினம் ரூ.6,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 0513)

(ஆ) 05 அலுவலகச் செலவுகள் – 03 மின் கட்டணங்கள் ரூ.1,20,000/– தொடரும் செலவினம்
(த.தொ.கு 2053 00 094 AB 0531)

(இ) 05 05 அறைகலன்கள் ரூ.4,00,000/–
05 அலுவலகச் செலவுகள் 05 அறைகலன்
(த.தொ.கு 2053 00 094 AB 0559)

(ஈ) 06 வாடகை, கட்டண வீதங்கள், வரிகள் –01 வாடகை ரூ.1,44,000/– தொடரும் செலவினம்
(த.தொ.கு 2053 00 094 AB 0611)

(உ) 19 இயந்திரமும் சாதனமும் –01 வாங்குதல் ரூ.1,20,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 1914)

(ஊ) 21 மோட்டார் வண்டிகள் 01 வாங்குதல் ரூ.11,12,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 2119)

(எ) 45 பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் ரூ.1,92,000/– தொடரும் செலவினம்
(த.தொ.கு 2053 00 094 AB 4500)

(ஏ) 76 கணினியும் துணை பாகங்களும் – 01 வாங்குதல் ரூ.1,00,000/–
(த.தொ.கு 2053 00 094 AB 7614)

6. மேலே பத்தி 4(iv)–இல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு "புது துணைப்பணி" (New Instrument of Services) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினத்திற்கு தேவைப்படும் நிதி முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதித் (வ.செ.பொது.1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து நடப்பாண்டிற்கு தேவைப்படும் நிதியை முன்பணமாக பெறுவதற்கு உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதித் (வ.செ.பொது.1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5 கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினத்தை 2014–2015 துணை மானியக் கோரிக்கையில் (Supplementary Estimate) சேர்க்கும்பொருட்டு உரிய வரைவு செயற்குறிப்பினை தவறாமல் உரிய நேரத்தில் நிதித் (வ.செ.பொது–

I/வருவாய்) துறைக்கு அனுப்புமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை இணைப்பில் கண்டுள்ள அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வட்டம் 04.02.2015– ஆம் நாள் முதல் செயல்படும்.

8. புதிய மரக்காணம் வட்டம் உருவாக்குவது குறித்து மேலே பத்தி 4–இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.5141/ மை.ம.ஆ.பி/15, நாள் 29.1.2015–இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண்.2295 (இரண்டாயிரத்து இருநூற்று தொன்னூற்று ஐந்து).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

இரா. வெங்கடேசன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை – 600 079.
அரசிதழில் அறிவிக்கை வெளியிடுவதற்காக)
கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5.
கூடுதல் தலைமைச் செயலாளர்//நில நிர்வாக ஆணையர், சென்னை–5.
முதன்மைச் செயலாளர்/நிலச் சீர்திருத்த ஆணையர்,சென்னை–5.
குடிமைப் பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர், சென்னை–5.
ஆணையர், நில அளவை மற்றும் நிலவரித்திட்டம், சென்னை–5.
மாவட்ட ஆட்சித்தலைவர், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்.
மாவட்ட கருவூல அலுவலர், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்.
மாநில கணக்காயர் (A&E), சென்னை–18.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–18. (பெயரிட்ட உறையில்)
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–18.
மாநில கணக்காயர் (CAG) சென்னை–9.
மாநில கணக்காயர் (RAO) சென்னை–9.
இயக்குநர், எழுதுபொருள் அச்சுத்துறை, சென்னை–2.
அனைத்துத் துறை தலைவர்கள் / அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
இயக்குநர், தகவல் மற்றும் மக்கள் தொடர்பு, சென்னை–9.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை–104.
முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை–9.
தலைமை தேர்தல் அதிகாரி, பொது (தேர்தல்கள்) துறை, சென்னை–9.
ஆணையர், கருவூலக்கணக்கு துறை, சென்னை–15.

<u>நகல்:–</u>

மாண்புமிகு அமைச்சர் (வருவாய்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
செயலாளர், வருவாய்த்துறை அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
நிதித்(வ.செ.பொது–I/வ.செ.பொது–II/வருவாய்/கக–3/கூ.உ(ம)நுபா/பொதுப்பணி-I/மை.ம.ஆபி)துறை, சென்னை–9.
இகோ/உதிரி,

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

பிரிவு அலுவலர் 5.2.15.
5/2/15

இணைப்பு

## வரைவு அறிவிக்கை

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள திண்டிவனம் வட்டத்தை பிரித்து 2015 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 04-ஆம் நாளிலிருந்து மரக்காணத்தை தலைமையிடமாகக் கொண்டு புதியதாக மரக்காணம் வட்டமொன்று கீழ்காணப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வருவாய் குறுவட்டங்களை தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

2. புதியதாக உருவாக்கப்படும் மரக்காணம் வட்டத்தில் உள்ளடங்கும் மரக்காணம் குறுவட்டம், சிறுவாடி குறுவட்டம் மற்றும் பிரம்மதேசம் குறுவட்டங்களை தற்போது கையாளப்படும் அதிகாரங்கள் இனி மரக்காணம் வட்டாட்சியர் அவர்களால் 2015 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 04-ஆம் நாளிலிருந்து கையாளப்படும்.

### விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டத்தில் நிறுத்தி வைக்கப்படும் வருவாய் கிராமங்களின் பட்டியல்

### மயிலம் குறுவட்டம்

| வ.எண். | கிராம எண். | கிராமத்தின் பெயர் |
|---|---|---|
| 1. | 83 | மயிலம் |
| 2. | 81 | செண்டூர் |
| 3. | 84 | கொல்லியங்குணம் |
| 4. | 88 | நல்லாமூர் |
| 5. | 82 | விளங்கம்பாடி |
| 6. | 76 | தென்கொளப்பாக்கம் |
| 7. | 77 | தென் ஆலப்பாக்கம் |
| 8. | 78 | கொரளூர் |
| 9. | 74 | கன்னணியம் |
| 10. | 75 | தழுதாளி |
| 11. | 71 | கணபதிபட்டு |
| 12. | 70 | அங்காணிக்குப்பம் |
| 13. | 69 | ஆத்திக்குப்பம் |
| 14. | 73 | கொணமங்கலம் |
| 15. | 90 | வெளியனூர் |
| 16. | 91 | அரியாங்குப்பம் |
| 17. | 79 | பாதிராப்புலியூர் |

| | | |
|---|---|---|
| 18. | 72 | வீடூர் (கிழக்கு) |
| 19. | 72 | வீடூர் (மேற்கு) |
| 20. | 89 | கள்ளக்கொளத்தூர் |

## தீவனூர் உள் வட்டம்

| வ.எண். | கிராம எண். | கிராமத்தின் பெயர் |
|---|---|---|
| 21. | 15 | தீவனூர் |
| 22. | 43 | ஆசூர் |
| 23. | 40 | கொள்ளார் |
| 24. | 16 | அகூர் |
| 25. | 17 | நடுவனந்தல் |
| 26. | 14 | விழுக்கம் |
| 27. | 34 | பாம்பூண்டி |
| 28. | 39 | காட்டுச்சிவிரி |
| 29. | 41 | சாலை |
| 30. | 42 | மேல்பேரடிக்குப்பம் |
| 31. | 10 | தணியல் |
| 32. | 48 | வேம்பூண்டி |
| 33. | 47 | முட்டியூர் |
| 34. | 37 | பெலாக்குப்பம் |
| 35. | 46 | பெரமண்டூர் (கி) |
| 36. | 46 | பெரமண்டூர் (மே) |
| 37. | 13 | இளமங்கலம் |
| 38. | 12 | மன்னம்பூண்டி |
| 39. | 36 | பட்டணம் |
| 40. | 38 | வெண்மணியாத்தூர் |
| 41. | 11 | புலியனூர் |

## ரெட்டணை குறுவட்டம்

| வ.எண். | கிராம எண். | கிராமத்தின் பெயர் |
|---|---|---|
| 42. | 45 | ரெட்டணை (கி) |
| 43. | 45 | ரெட்டணை (மே) |
| 44. | 86 | கூட்டேரிப்பட்டு |
| 45. | 57 | கொடிமா |
| 46. | 58 | சோழியசொக்குளம் |
| 47. | 87 | சின்னவளவனூர் |
| 48. | 59 | ஆலகிராமம் (கி) |
| 49. | 59 | ஆலகிராமம் (மே) |
| 50. | 66 | பேரணி |
| 51. | 80 | பாலப்பட்டு |
| 52. | 85 | சின்ன நெற்குணம் |
| 53. | 60 | நெடிமோழியனூர் |
| 54. | 62 | வி.நல்லாளம் |
| 55. | 63 | வி.பாஞ்சாலம் |
| 56. | 44 | வெங்கந்தூர் |
| 57. | 55 | பந்தமங்கலம் |
| 58. | 56 | தி.கேணிப்பட்டு |
| 59. | 65 | செண்டியம்பாக்கம் |
| 60. | 61 | செ.கொத்தமங்கலம் |
| 61. | 64 | பெரியதச்சூர் (தெ) |
| 62. | 64 | பெரியதச்சூர் (வ) |
| 63. | 54 | அவ்வையார்குப்பம் |
| 64. | 53 | முப்புளி |
| 65. | 67 | சித்தணி |
| 66. | 68 | எழாய் |

## ஓலக்கூர் உள் வட்டம்

| வ.எண். | கிராம எண். | கிராமத்தின் பெயர் |
|---|---|---|
| 67. | 125 | ஓலக்கூர் (மேல்பாதி) |
| 68. | 128 | ஓலக்கூர் (கீழ்பாதி) |
| 69. | 127 | எஸ்.கடூர் |
| 70. | 131 | பாதிரி |
| 71. | 129 | கூச்சிக்கொளத்தூர் |
| 72. | 178 | ஓங்கூர் |
| 73. | 177 | கம்பூர் |
| 74. | 130 | கரிக்கம்பட்டு |
| 75. | 133 | நல்லாத்தூர் |
| 76. | 134 | பள்ளிப்பாக்கம் |
| 77. | 132 | நங்குணம் |
| 78. | 142 | நொளம்பூர் |
| 79. | 171 | ஏப்பாக்கம் |
| 80. | 170 | அண்டப்பட்டு |
| 81. | 135 | கீழ்ஆதனூர் |
| 82. | 136 | மங்கலம் |
| 83. | 140 | கீழ்கூடலூர் |
| 84. | 141 | ஈச்சேரி |

## ஆவணிப்பூர் உள்வட்டம்

| வ.எண். | கிராம எண். | கிராமத்தின் பெயர் |
|---|---|---|
| 85. | 182 | ஆவணிப்பூர் |
| 86. | 183 | சேந்தமங்கலம் |
| 87. | 168 | கீழ்மண்ணூர் |
| 88. | 167 | வண்டாரம்பூண்டி |
| 89. | 169 | கருப்பூர் |
| 90. | 166 | கீழ்நெமிலி |
| 91. | 172 | கீழ்பசார் |
| 92. | 173 | ஆட்சிப்பாக்கம் |
| 93. | 184 | நரமாகாணி |

| | | |
|---|---|---|
| 94. | 181 | கடவம்பாக்கம் |
| 95. | 179 | காட்டுப்புஞ்சை |
| 96. | 180 | வடகளவாய் |
| 97. | 155 | மண்டபெரும்பாக்கம் |
| 98. | 156 | குண்ணப்பாக்கம் |
| 99. | 165 | தென்னம்பூண்டி |
| 100. | 176 | அன்னம்பாக்கம் |
| 101. | 163 | கீழ்சேவூர் |
| 102. | 161 | சேனலூர் |
| 103. | 164 | கீழ்பூதேரி |
| 104. | 175 | பாங்கொளத்தூர் |
| 105. | 174 | பனையூர் |

<u>வடசிறுவளுர் உள்வட்டம்</u>

| வ.எண். | கிராம எண். | கிராமத்தின் பெயர் |
|---|---|---|
| 106. | 35 | ஊரல் |
| 107. | 1 | மாம்பாக்கம் |
| 108. | 2 | செம்பாக்கம் |
| 109. | 3 | கோணலூர் |
| 110. | 8 | புத்தனந்தல் |
| 111. | 6 | வெள்ளிமேடுப்பேட்டை |
| 112. | 177 | மேல்பாக்கம் |
| 113. | 120 | சாத்தனூர் |
| 114. | 118 | சித்தேரிப்பட்டு |
| 115. | 25 | மேலாதனூர் |
| 116. | 26 | அம்மணம்பாக்கம் |
| 117. | 9 | வடசிறுவளுர் |
| 118. | 19 | நாகவரம் |
| 119. | 22 | தாதாபுரம் |
| 120. | 23 | சிங்காணிக்குப்பம் |
| 121. | 24 | கீழ்மலையனூர் |
| 122. | 123 | வைரபுரம் |

| | | |
|---|---|---|
| 123. | 124 | தேங்காய்பாக்கம் |
| 124. | 27 | கொடியம் |
| 125. | 32 | கருவம்பாக்கம் |
| 126. | 33 | கிராண்டிபுரம் |
| 127. | 30 | பெரப்பேரி |
| 128. | 31 | வடம்பூண்டி |
| 129. | 5 | ஆத்திப்பாக்கம் |
| 130. | 7 | நெடுந்தோண்டி |
| 131. | 4 | மேல்சிவிரி |
| 132. | 119 | தி.பாஞ்சாலம் |
| 133. | 138 | மேல்பேட்டை |
| 134. | 137 | சாரம் |
| 135. | 29 | நெய்குப்பி |
| 136. | 28 | புலியூர் |
| 137. | 21 | கீழ்மாவிலங்கை |
| 138. | 20 | மேல்மாவிலங்கை |
| 139. | 18 | கல்பாக்கம் |
| 140. | 126 | புறங்கரை |
| 141. | 122 | ஏவளூர் |
| 142. | 121 | கீழ்க்கூரணை |

## திண்டிவனம் உள்வட்டம்

| வ.எண். | கிராம எண். | கிராமத்தின் பெயர் |
|---|---|---|
| 143. | 93 | ஓமந்தூர் |
| 144. | 101 | எறையானூர் |
| 145. | 100 | கர்ணாவூர் |
| 146. | 50 | ஜக்காம்பேட்டை |
| 147. | 118 | சலவாதி |
| 148. | 51 | சிங்கனூர் |
| 149. | 99 | தென்களவாய் |
| 150. | 52 | தென்பசியார் |
| 151. | 98 | அவணம்பட்டு |

| | | |
|---|---|---|
| 152. | 97 | கீழ்எடையாளம் |
| 153. | 94 | அன்னம்புத்தூர் |
| 154. | 102 | வரகுப்பட்டு |
| 155. | 95 | வேங்கை |
| 156. | 96 | கீழ்பேரடிக்குப்பம் |
| 157. | 92 | கீழ்சித்தாமூர் |
| 158. | 114 | திண்டிவனம் |
| 159. | 116 | அவரைப்பாக்கம் |
| 160. | 115 | ரோசனை |
| 161. | 111 | காவேரிப்பாக்கம் |
| 162. | 112 | வடஆலப்பாக்கம் |
| 163. | 49 | கிடங்கல் |
| 164. | 110 | மானூர் |
| 165. | 109 | ஆத்தூர் |
| 166. | 108 | எண்டியூர் |
| 167. | 107 | குருவம்மாபேட்டை |
| 168. | 103 | மொளசூர் |
| 169. | 104 | கோவடி |
| 170. | 139 | விட்டலாபுரம் |
| 171. | 143 | கட்டளை |
| 172. | 144 | ஜானகிப்பேட்டை |
| 173. | 105 | தென்நெற்குணம் |
| 174. | 106 | எலவளப்பாக்கம் |

புதியதாக உருவாக்கப்படும் மரக்காணம் வருவாய் வட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய வருவாய் கிராமங்களின் பட்டியல்

### மரக்காணம் உள்வட்டம்

| வ.எண். | கிராம எண். | கிராமத்தின் பெயர். |
|---|---|---|
| 1. | 215 | அனுமந்தை |
| 2. | 223 | செட்டிக்குப்பம் |
| 3. | 222 | செய்யாங்குப்பம் |
| 4. | 221 | கூனிமேடு |
| 5. | 225 | கீழ்புத்துப்பட்டு |
| 6. | 207 | அசப்பூர் |
| 7. | 206 | ஆலத்தூர் |
| 8. | 208 | குரும்பரம் |
| 9. | 209 | கந்தாடு (கி) |
| 10. | 209 | கந்தாடு (மே) |
| 11. | 219 | திருக்கனூர் |
| 12. | 220 | கேசவநாயக்கன்பாளையம் |
| 13. | 218 | எம்.புதுப்பாக்கம் |
| 14. | 210 | மரக்காணம் (தெ) |
| 15. | 210 | மரக்காணம் (வ) |
| 16. | 216 | ஊரணி |
| 17. | 211 | ஆலப்பாக்கம் |
| 18. | 217 | வட அகரம் |
| 19. | 213 | பனிச்சமேடு |
| 20. | 212 | ஆட்சிக்காடு |
| 21. | 214 | கீழ்பேட்டை |

### சிறுவாடி குறுவட்டம்

| வ.எண். | கிராம எண். | கிராமத்தின் பெயர். |
|---|---|---|
| 22. | 198 | முன்னூர் (தெ) |
| 23. | 198 | முன்னூர் (வ) |
| 24. | 192 | குரூர் |
| 25. | 191 | வைடப்பாக்கம் |
| 26. | 194 | வேப்பேரி |
| 27. | 201 | ஓமிப்பேர் |
| 28. | 205 | வடகோடிப்பாக்கம் |
| 29. | 221 | நடுக்குப்பம் (கி) |
| 30. | 221 | நடுக்குப்பம் (மே) |
| 31. | 200 | ஆடவல்லிகூத்தான் |

| | | |
|---|---|---|
| 32. | 202 | அடசல் |
| 33. | 199 | சொரப்பட்டு |
| 34. | 203 | கொளத்தூர் |
| 35. | 197 | சாத்தமங்கலம் |
| 36. | 195 | சிங்கனந்தல் |
| 37. | 186 | நல்லூர் |
| 38. | 187 | பந்தாடு |
| 39. | 185 | வடநெற்குணம் |
| 40. | 193 | ஆலங்குப்பம் |
| 41. | 204 | சிறுவாடி |
| 42. | 196 | முருக்கேரி |
| 43. | 188 | நாகல்பாக்கம் |
| 44. | 189 | ராயநல்லூர் |
| 45. | 190 | நகர் |

பிரம்மதேசம் குறுவட்டம்

| வ.எண். | கிராம எண். | கிராமத்தின் பெயர். |
|---|---|---|
| 46. | 149 | தி. நல்லாளம் |
| 47. | 146 | பழமுக்கல் |
| 48. | 150 | பிரம்மதேசம் |
| 49. | 145 | பெருமுக்கல் |
| 50. | 157 | நல்முக்கல் |
| 51. | 159 | அழகியப்பாக்கம் |
| 52. | 158 | சொக்கந்தாங்கல் |
| 53. | 160 | கீழ்அருங்குணம் |
| 54. | 162 | வடகொளப்பாக்கம் |
| 55. | 148 | கீழ்சிவிரி |
| 56. | 147 | தென்னேரி |
| 57. | 152 | ஏந்தூர் |
| 58. | 153 | அரியதாங்கல் |
| 59. | 154 | மடவந்தாங்கல் |
| 60. | 151 | வன்னிப்பேர் |

இரா. வெங்கடேசன்,
அரசு செயலாளர்.

// உண்மை நகல் //

5.2.15.
பிரிவு அலுவலர்
5/2/15